**செய்தி வெளியீடு எண்: 49** **நாள்: 30.12.2025**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் காசி தமிழ் சங்கமம் 4.0 நிறைவு விழாவில் ஆற்றிய உரை</u>**

மாண்புமிகு பாரத குடியரசு துணை ஜனாதிபதி திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களே, மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களே, மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் அவர்களே, மேடையில் வீற்றிருக்கும் மரியாதைக்குரியவர்களே.

காசியில் இருந்து இங்கே வந்துள்ள முன்னூறு மாணவ செல்வங்களே, இங்கு கூடியிருக்கும் சகோதர, சகோதரிகளே, அனைவருக்கும் மாலை வணக்கம்.

இன்று காசி தமிழ் சங்கமம் - 4.0 திருவிழாவின் நிறைவு நாள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது காசி தமிழ் சங்கமம் திருவிழா. ஒவ்வொரு ஆண்டும் மேலும் மேலும் பிரபலமாகி வருகிறது. இந்த விழாவால் தமிழ் மக்கள் மிக சந்தோஷமாக இருக்கிறார்கள். காரணம், காசி - தமிழகத்துடனான இணைப்பு, ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. காசி - ராமேஸ்வரத்துக்கு இடையிலான இணைப்பு பல ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. ஸ்ரீராமர் காலம் தொட்டு உள்ளது.

சிவபெருமான் மீதான பக்தி, தமிழ்நாடு மற்றும் தமிழ் மக்களின் முக்கிய கலாசாரம். தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டுடைய இறைவா போற்றி. அதனால், இந்த வருடம் "தமிழ் கற்கலாம்" என்பதே இந்த திருவிழாவின் கருத்தாக்கம். இந்த ஆண்டு, ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தமிழ் கற்கிறார்கள். முன்னூறு மாணவர்கள் காசியில் இருந்து இங்கு வந்து ஹிந்தி பேசும் மாணவர்கள் தமிழ் கற்கிறார்கள். தமிழ் மொழி பழமையான மொழி, சக்திவாய்ந்த

மொழி, மிக அழகான மொழி. இது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

தமிழ் மொழியின் பிரபலத்துக்கும் தமிழ் மொழியின் கலாசாரத்துக்கும் பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் செய்தது போல வேறு யாரும் செய்தது இல்லை. இதற்காக தமிழ் மக்கள் சார்பாக, நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பாரத குடியரசுத் துணை தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் இங்கே நம்மோடு இருக்கிறார், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். நம்மில் ஒருவர் தமிழ் மக்களின் இதயத்துடிப்பு அவருக்கு நன்றாகத்தெரியும். இரவும் பகலும் நமது மாநிலத்தின் முன்னேற்றத்துக்காக அவர் உழைக்கிறார். இதற்காக தமிழ் மக்கள் சார்பாக காசி மக்கள் சார்பாக நமது மாண்புமிகு பாரத குடியரசுத் துணை ஜனாதிபதி திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

..................................................................................................................................

மக்கள் மாளிகை, சென்னை-22 வெளியீடு:

நாள்: 30.12.2025 மக்கள் தொடர்பஅலுவலகம்